1969 செப்டம்பர் 13]

திரு. ஜெ. பெள்ளி கௌடர்: தலைவர் அவர்களே, லாட்டரிச் சீட்டுகளை கள்ளத்தனமாக அச்சடித்தும், லாட்டரி சீட்டுகளைத் திருத்தி பரிசுபெற முயற்சி செய்தும் வருபவர்கள் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தலைவர் அவர்களே, அப்படி ஏதாவது குறிப்பிட்ட சம்பவத்தைப்பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Harijan Welfare Department

* 278. *Q.*—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state:

(*a*) the total number of employees in the Harijan Welfare Department;

(*b*) the number among them, belonging to Scheduled Caste; and

(*c*) the rent paid for the office of the Director of Harijan Welfare Department in Madras?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) அரிசன நலத்துறையில் உள்ள பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை 5,869 ஆகும்.

(இ) அவர்களில் அரிசனங்களின் எண்ணிக்கை 3,215 ஆகும்.

(உ) அரிசன நலத்துறை இயக்குநர் அலுவலகம் தற்போது அரசுக் கட்டமான "எழிலக"த்தில் இருப்பதால் வாடகை குறித்த வினா எழவில்லை.

DR. H. V. HANDE: While we appreciate the fact that a large percentage of employees are Harijans, will it not be possible for Government to re-examine the method of recruitment and see that top posts like Director of Harijan Welfare and Deputy Director of Harijan Welfare are as far as possible, within the limits of possibility, manned by Harijans so that whenever demands are made by poor Harijans, they can be looked into more sympathetically?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இந்த அரிசன நலத்துறை இயக்குநர், இன்னும் மேற்பார்வை செய்கிற ஆணைச் செயலாளர் ஆகியவர்கள் இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தான்.

திரு. கே. பி. எஸ். மணி: அரிசன நலத்துறையில் 3,215 பேர்கள் இருப்பதாக அமைச்சர் சொன்னார்கள். இவர்களில் பெரும்பாலோர் கடைநிலை ஊழியர்கள் தான், குறிப்பிட்ட ஒருசில எண்ணிக்கையில் தான் உயர் பதவியில் இந்தச் சமுதாயத்தினர் இருக்கிறார்கள் என்பது உண்மையா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : நிர்வாகத் தொகுதியில் 87 பேர்கள், போதனு பகுதியில் உள்ளவர்கள் ஆகியோர்களேச் சேர்த்துத்தான், 3,215 பேர்கள் இருக்கிருர்கள்.

Agricultural Production in Kodaikanal

* 279. *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government in regard to the augmentation of agricultural production with the help of German Experts at Kodaikkanal; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) & (இ) கோடைக்கானலில் ஜெர்மன் நிபுணர்கள் உதவியுடன் விவசாயத்தை மேலும் பெருக்குவதுபற்றி எந்தச் செயற்குறிப்பும் இல்லே. ஆயினும் நீலகிரியில் கிடைத்த அனுபவத்தையும், கண்டு பிடிப்பையும், கோடைக்கானலில் விவசாய அலுவலர்கள் பயன் படுத்துவார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : ஜப்பான் நாட்டிலே மிகக் குறைந்த இடத்திலே அதிகமான விளேச்சல் பெற்றுக் கொண்டிருக் கிருர்கள். அந்த நாட்டு உதவியுடன் கோடைக்கானல் பகுதியிலும் சிறுசிறு நிலங்கள் இருப்பதால் அதிக உற்பத்தியைப் பெருக்க முயற்சி எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இந்தக் கேள்வி நீலகிரி ஜில்லாவில் ஜெர்மன் நாட்டு உதவியுடன் விவசாயத்தைப் பெருக்குவது சம்பந்தமானது. அங்கு நம்முடைய நாட்டு நிபுணர்களுக்குக் கிடைக்கிற அனுபவத்தைக் கொண்டு கோடைக்கானல் பகுதியிலும் அதிக அளவுக்கு உற்பத்தியைப் பெருக்கத் திட்டமிடலாம். உறுப்பினர், ஜப்பான் நாட்டு முறையைப்பற்றிக் கேட்கிருர். அதற்கு இது இடமில்லே.

திரு. இல. பலராமன் : நீலகிரியில் கண்ட அனுபவம் என்ன வென்று அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : நீலகிரியில் யார் கண்ட அனுபவத்தை மாண்புமிகு உறுப்பினர் கேட்கிருர் ? (சிரிப்பு) இங்கே ஜெர்மன் நாட்டு நிபுணர்கள் உருளேக்கிழங்கு, காய்கறி இவற்றை அபிவிருத்தி செய்வது, கோழிப்பண்ணே வளர்ச்சி, கால்நடை வளர்ச்சி ஆகியவற்றில் புதிய முறையில் சோதனே செய்து கொண்டிருக்கிருர்கள்.